<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 391/2017

அரசுதரப்பு 12 -வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்லதுரை | வயது | : | 62 |
| தந்தை/கணவர் பெயர் | : | சின்னபிள்ளை | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி 14.09.2022 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது கடவாச்சேரியில் வசிக்கிறேன். விவசாய வேலை செய்கிறேன். சம்பவத்தின்போது நான் கிராம உதவியாளராக பணியில் இருந்தேன். 13.09.2014 ஆம் வருடம் சுமார் 12.00 மணியளவில் அண்ணாமலை நகர் காவல்நிலையத்திலிருந்து விஏஓவுக்கு போன் வந்தது. விஏஒ என்னை அழைத்து கொண்டு அண்ணாமலை நகர் காவல்நிலையம் சென்றார். விஏஓவிடம் காவல்நிலையத்தில் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடமும் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் அசாஆ.12 ஆகும். கைப்பற்றுதல் மகசரில்

உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும அசாஆ.13 ஆகும். நான் எதுவும் பார்க்கவில்லை, எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. ஆஜர் எதிரிகளை தெரியாது.

சாட்சி பிறழ்சாட்சியாக கருத அரசுதரப்பில் அனுமதி கேட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை - போலிசார் விசாரணையில் கடந்த 03.05.2014 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு அலுவல் நிமித்தமாக நான் அலுவலகம் சென்றிருந்தபோது தெருவிலுள்ள ஓய்வு பெற்ற பேராசிரியர் பன்னீர் செல்வம் வீட்டில் கீழ்புற தரை போர்ஷனில் பலத்த வெடி சத்தம் கேட்டது. நான் காலை 10.30 மணிக்கு கிராம நிர்வாக அலுவலர் முத்து நாயகம் அவர்களுக்கு செல்போனில் தொடர்பு கொண்டு பேசியதாகவும் அவர் வந்தவுடன் நாங்கள் இருவரும் சம்பவ இடத்திற்கு சென்றதாகவும், அங்கு பதற்றத்துடன் மக்கள் அங்குமிங்கும் ஓடி கொண்டிருந்ததாகவும், உடனே விஏஓ போலிசாருக்கு தகவல் சொன்னதாகவும், சம்பவம் நடந்த வீட்டை நானும் விஏஓவும் பார்த்தபோது வீட்டின் கதவு திறந்து கிடந்ததாகவும், அறையில் வெடிமருந்து, பாஸ்பரஸ், ஆகியவைகளும் ,ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து சிதறி கிடந்ததாகவும், சுவர் வீரலுற்று இருந்ததாகவும், சம்பவ் இடத்தில் கைதுப்பாக்கி, 4 வீச்சருவாள், 1 ஸ்டீல் ராடு, கறி வெட்டும் கத்தி, பயன்படுத்த பட்ட, பயன்படுத்த படாத துப்பாக்கி குண்டுகள் இருநத்தாகவும், பிச்சுவாகத்தி ஒன்று இருந்ததாகவும், அருள்பிரசாத் என்பவரது அடையாள அட்டை மற்றும், பேன் கார்டுகள் ரூம் முழுவதும் சிதறி கிடந்ததாகவும் அக்கம் பக்கத்தில் விசாரித்தபோது அந்த வீட்டில் இருந்த மோகன்ராம் என்பவருக்கு வெடி வெடித்ததில் பலத்த காயம் ஏற்பட்டதாகவும் உடன்

இருந்த அருள், சுரேந்தர், சத்தியா, சந்தோஷ், பட்டாபி ஆகியோர்கள் காயம்பட்டு அவர்களை ஆட்டோவில் அழைத்து சென்றதாகவும் தெரிவித்தனர். மோகன்ராம், நடராஜன் என்பவர்களை மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக கேள்விப்பட்டதாகவும், இதுகுறித்து விஏஓ காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், தன்னுடைய முன்னிலையில் மேற்படி பொருட்களை கைப்பற்றியதாகவும், விசாரணையில் சொல்லிவிட்டு தற்சமயம் எதிரிகளை காப்பாற்ற பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1, 10, 12 எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.

(ஒம்/-) எஸ். ஜவகர்,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
கடலூர்

<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 391/2017

அரசுதரப்பு 13-வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பிச்சமுத்து | வயது | : | 78 |
| தந்தை/கணவர் பெயர் | : | பெரியசாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி 14.09.2022 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது சிதம்பரம் மாரியப்பா நகரில் குடியிருக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிசாரிடம் நான் ஊரில் இல்லை, எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னேன். வெடிகுண்டு வெடித்ததாக சொன்னார்கள்.

சாட்சி பிறழ்சாட்சியாக கருத அரசுதரப்பில் அனுமதி கேட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை - போலிசார் விசாரணையில் கடந்த 03.05.2014 அன்று காலை 10.30 மணிக்கு நான் வீட்டில் இருக்கும்போது வெளியில் செல்ல காரை



எடுக்கும்போது வெடி சத்தம் கேட்டு வெளியில் சென்று பார்த்தபோது சில நபர்கள் அங்குமிங்கும் ஓடி கொண்டிருந்ததாகவும், சிலர் இரத்த காயத்துடன் இருந்ததாகவும், காயம் பட்ட நபரை அரசு மருத்துவமனைக்கு ஏற்றி சென்றதாகவும், சம்பவம் நடந்த அறையை பார்த்த போது அறையில் ஜன்னல்கள் உடைந்து கிடந்ததாகவும், விரிசல் ஏற்பட்டதாகவும், மேலும் வீச்சருவாள், பாஸ்பரஸ், வெடிமருந்துகள் பயன்படுத்திய, பயன்படுத்தாத தோட்டாக்கள் இருந்ததாகவும், ஐடி கார்டு, பான்கார்டு இருந்ததாகவும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1, 10, 12 எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.

(ஒம்/-) எஸ். ஜவகர்,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
கடலூர்

<u>முதன்மை அமர்வு நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.</u>

அமர்வு வழக்கு எண் : 391/2017

அரசுதரப்பு 14-வது சாட்சியின் வாக்குமூலம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தமிழ்மணி | வயது | : | 77 |
| தந்தை/கணவர் பெயர் | : | பிச்சமுத்து | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலூக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி 14.09.2022 ஆம் நாளாகிய இன்று மேற்படி சாட்சிக்கு முதன்மை மாவட்ட நீதிபதியால் சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை - நான் தற்போது சிதம்பரம் மாரியப்பா நகரில் வசிக்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள். போலிசாரிடம் நான் ஊரில் இல்லை, எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னேன். வெடிகுண்டு வெடித்ததாக சொன்னார்கள்.

சாட்சி பிறழ்சாட்சியாக கருத அரசுதரப்பில் அனுமதி கேட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை - போலிசார் விசாரணையில் கடந்த 03.05.2014 அன்று காலை 10.30 மணிக்கு நான் வீட்டில் இருக்கும்போது வெளியில் செல்ல காரை

எடுக்கும்போது வெடி சத்தம் கேட்டு வெளியில் சென்று பார்த்தபோது சில நபர்கள் அங்குமிங்கும் ஓடி கொண்டிருந்ததாகவும், சிலர் இரத்த காயத்துடன் இருந்ததாகவும், காயம் பட்ட நபரை அரசு மருத்துவமனைக்கு ஏற்றி சென்றதாகவும், சம்பவம் நடந்த அறையை பார்த்த போது அறையில் ஜன்னல்கள் உடைந்து கிடந்ததாகவும், விரிசல் ஏற்பட்டதாகவும், மேலும் வீச்சருவாள், பாஸ்பரஸ், வெடிமருந்துகள் பயன்படுத்திய, பயன்படுத்தாத தோட்டாக்கள் இருந்ததாகவும், ஐடி கார்டு, பான்கார்டு இருந்ததாகவும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

1, 10, 12 எதிரிகள்தரப்பில் குறுக்கு விசாரணை - இல்லை.

(ஒம்/-) எஸ். ஜவகர்,
முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
கடலூர்